**C.C.No.242/2023 Date: 15.07.2026**

அ.சா.1 சுப்பிரமணியன், த.பெ.சேவுகப்பெருமாள்

2 முதல் 8 எதிரிகள் ஆஜர்.

(சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை:**

இரவு 8.00 மணிக்கு மேல் சம்பவம் நடந்ததால் யார் சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று தெரியாது என்றால் ஆமாம், ஊர் ஆட்கள் நிறைய பேர் நின்றதால் அனுமானத்தின்பேரில் புகார் கொடுத்தேன். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் என்னால் அதை உறுதிபடுத்த முடியவில்லை, இரவில் நடந்ததால் அனுமானத்தின் பேரில் கொடுத்தேன். நான் எதிரிகள் பக்கத்து ஊர் என்பதால் அவர்களுடன் சமாதானம் ஆகிவிட்டேன் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.242/2023**

Deposition of witness for Prosecution அ.சா.2

| | | |
|---|---|---|
| பெயர் | : | சண்முகவேல் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | கிருஷ்ணன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 15.07.2026

2 முதல் 8 எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிகிறேன். எனக்கு முன்பாக தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றிய திரு.சக்திவேல் மற்றும் திரு.சகாய புஸ்பராஜ் ஆகியோர்களையும் அவர்களின் கையெழுத்துக்களையும் நன்கு அறிவேன். அதன் அடிப்படையில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். சார்பு ஆய்வாளர் திரு.சக்திவேல் கடந்த 26.01.2015 ம் தேதி பணியில் இருந்தபோது அ.சா.1 கொடுத்த புகார் மனுவை பெற்று தேவகோட்டை தாலுகா காவல் நிலைய குற்ற எண்.44/2015, இதச பிரிவு 379 ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(மேற்படி முதல்**

**தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் சம்பவ இடம் சென்று மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். (**மேற்படி மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 11 நபர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கு தொடர்பாக பட்டியல் சாட்சி 11 கிராம நிர்வாக அலுவலர் திரு.சண்முகவள்ளி அவர்களிடம் விசாரணை செய்து ஆவணங்களைப் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரிகளை தேடியபோது எதிரிகள் மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் முன்பிணை பெற்று சமூகம் நீதிமன்றத்தில் சரண் அடைந்துவிட்டார்கள். பின்னர் சார்பு ஆய்வாளர் திரு.சக்திவேல் பணிமாறுதலில் சென்றுவிட்டபடியால் சார்பு ஆய்வாளர் திரு.சகாய புஸ்பராஜ் வழக்கின் புலன்விசாரணையை மேற்கொண்டு எதிரிகள் மீது சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவை இதச பிரிவு 379 லிருந்து 147, 448, 379 இதசவின்படி மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். (**மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கையை சார்பு ஆய்வாளர் பதிவுசெய்துவிட்டார் என்றால் சரியல்ல. சம்பவ சாட்சிகளை சம்பவ இடத்தில் விசாரிக்காமல் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்துள்ளார் என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் காவல்

நிலையத்தில் வைத்து பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கை சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.